Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 15 (28-01-1993) வியாழக்கிழமை ஓசை 345

## விடைத்தாள் மீளாய்வுக்கு உடன் விண்ணப்பிக்குக

அண்மையில் வெளியாகிய க. பொ. த. (உ/த) பரீட்சை விடைத்தாள்களை மறு பரிசீலனை செய்யும் திகதியை இரண்டு வாரங்களுக்கு பின்போடும்படி பரீட்சை ஆணையாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் அறிவித்துள்ளன. ஆகவே அதிபர்கள் பாடசாலை மாணவர்களது விடைத்தாளின் மறு பரிசீலனை விண்ணப்ப படிவங்களை சேகரித்து அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். கல் [6 ஆம் பக்கம் பார்க்க]

# இந்தியாவில் மீண்டும் மத கலவரம்

# இந்து-முஸ்லிம் மோதல் வெடித்தது

## டில்லி, பம்பாயில் துப்பாக்கிச் சூடு

(டில்லி)

இந்தியாவின் பம்பாய், டில்லி நகரங்களில் மீண்டும் இந்து-முஸ்லிம் கலவரங்கள் வெடித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நகரில் பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொது மக்களில் இருவர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயம் அடைந்தனர். பாபர்மசூதி இடிக்கப்பட்டபோது எழுந்த மதக் கலவரத்தை அடுத்தும் தற்பொழுது இந்திய குடியரசு தினத்தை அடுத்தும் இந்த வன்முறைகள் மூண்டுள்ளன.

பம்பாய் நகரில் மீண்டும்நேற்று முந்தினம இரவு மதக்கலவரம் இடம்பெற்றது. இந்த மதக்கலவரத்தில் ஈடுபட்டவர்களை அடக்க பொலிசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் குறைந்தது 2 பேர் பலியாகினர் 7 பேர் காயமடைந்தனர்.

மேலும் மீரத் நகரிலும் மதக் கலவரத்தில் ஒரு பொலிசார் கொல்லப்பட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி நோக்கி வந்த வெளிநாட்டுப்பிரஜை கைது

வடபகுதி நோக்கிச் வந்து கொண்டிருந்த வெளி நாட்டு நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் தற்போது சுவிட்சலாந்து நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட இவர் இரகசியமொழியிலான சில செய்திகளைக் கொண்டு வந்ததாகவும். அச் செய்திகள் விடுதலைப்புலிகள் தலைமையகத்துக்குசேர வேண்டியவையாக இருக்கலாமெனவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர். தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இந்த நபர்விடுதலைப்புலிகளுக்கான ஆயுதக் கடத்தலுடனும் தொடர்பு கொண்டவராக இருக்கக்கூடும் என்று

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## இந்திய அரசைக் கண்டித்து படைப்பாளிகள் பேரணி

### பல்கலையில் அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிகளின் போராளிகள் இந்திய அரசின் நயவஞ்சகச் செயலினால் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ் நகரில் கண்டனப் பேரணியும், கண்டனக் கூட்டமும் நடைபெற்றது

இந்திய அரசின் நாகரிகமற்ற இந்த நயவஞ்சகச் செயலைக் கண்டிக்கும் மேற்படி கண்டன இயக்கத்தை தமிழீழத்தின் கலை, இலக்கிய படைப்பாளிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோர் இணைந்து நடாத்தினர்.

நேற்று மாலை 2 30 மணியளவில் யாழ். நாச்சிமார் கோவிலடியில் இருந்து கண்டனப் பேரணி ஆரம்பமாகியது இக் கண்டனப் பேரணியில் நூற்றுக்கணக்கான படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் கலை, இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் "அமைதி தேடி வந்த புறா சிறகு இழந்தது"

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## யாழ். வங்கிகளில் பணப் பற்றாக்குறை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் வங்கிகளில் தற்போது பணப்புழக்கம் குறைந்து வருவதனால் வாடிக்கையாளருக்கு மட்டுப்படுத்தப்பட்ட தொகைப் பணத்தையே வழங்கி வருகின்றன. இதனால் இலங்கை வங்கி முன்னாலும், மக்கள் வங்கி முன்னாலும் நீண்ட கியூ நிற்பதை தற்போது கவனிக்கக் கூடியதாக உள்ளது.

ஆஸ்பத்திரி முன்பாக உள்ள இலங்கை வங்கி பிரதான அலுவலகம் சேமிப்புக் கணக்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## தடா சட்டத்தின் கீழ் நெடுமாறன் கைதானார்

தேச விரோதச் செயலில் ஈடுபட்டதாகத் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் நெடுமாறன் தடா சட்டத்தின்கீழ் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

மதுரையில் கைதுசெய்யப்பட்ட அவர் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவதற்காகச் சென்னைக்குக்கொண்டு வரப்பட்டார்.

## புலிகளின் நடவடிக்கை தமிழகத்தில் அதிகரிப்பு

### சுப்பிரமணியம் சுவாமி குற்றச்சாட்டு

[சென்னை]

விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் தமிழகத்தில் அதிகரித்திருப்பதாக ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர், அண்மையில் தமிழகத்தில் இடம்பெற்ற மூன்று குண்டுச் வெடிப்புச்சம்பவங்கள் இதனை உறுதிப்படுத்துவதாகக் கூறினார்.

விழுப்புரத்தில் காந்திசிலை குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டதற்குத் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இதுவரை கண்டனம் தெரிவிக்காதற்கு அவர்குறைகூறினார். மேலும் பாட்டாளி மக்கள் கட்சியின் புலிகள் ஆதரவுப் போக்கிற்கு அவர் கண்டனம் தெரிவித்தார்.

## தலைவர் பிரபாகரனுக்கு தொண்டமான் கடிதம்

### சமஷ்டி என்ற போர்வையில் வட-கிழக்கை துண்டாட சதி

"ஐந்து ஆண்டுகளாக வடக்கு கிழக்கு மாகாணங்களை துண்டிப்பதற்காக ஒரு சூழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சூழ்ச்சியின் ஒரு வடிவமாகத்தான சமஷ்டி வருகிறது. கவனமாக இருங்கள்" இவ்வாறு சிறிலங்காவின் அமைச்சர் செள. தொண்டமான் அண்மையில் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரனுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இத் தகவலை நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இந்திய மேலாதிக்கத்திற்கெதிராகவும் தளபதி கிட்டு உட்பட 10 போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தவும் கலைஞர்கள் நடாத்திய கூட்டத்தில விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசாங்கத்தின் பயங்கரவாத ராஜதந்திரம்

### டில்லியின் அணுகுமுறை பற்றி அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

"இந்திய இராஜதந்திரம் மென்முறையானதல்ல, வன்முறையானது. வக்கிரமானது. அது ஒரு ராஜதந்திரப் பயங்கரவாதம்" இவ்வாறு நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளுக்கும் அஞ்சலியும், இந்திய அரசின் செயலுக்கு கண்டனமும் தெரிவித்து கலை, இலக்கிய படைப்பாளிகளாலும், பத்திரிகையாளராலும் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் ஆய்வுரை நிகழ்த்திய விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார். அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது;

எமது விடுதலைப் போராட்டம் ஒரு நீண்ட முடிவில்லாத கதையாக தொடர்ந்து செல்கிறது இந்தப் போராட்டத்திலே இன்று ஒரு சிக்கல் நிறைந்த நிச்சயமற்ற தன்மை தோன்றுகின்றது. மாறி மாறி வரும் பேரிழப்புக்கள், பெரும் அழிவுகள் இப்படியாக எமது போராட்டத்தில் இடைக்கிடையே காலத்திற்கு காலம் சில பின்னடைவுகளும் ஏற்படுவது உண்டு. இந்தநிச்சயமற்ற தன்மைக்கும், பின்னடைவுக

(5-ம் பக்கம் பார்க்க)

## பாலமுனையில் புலிகள் தாக்கு எட்டு இராணுவம் பலி

கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இவர்களது ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

பாலமுனை என்ற கிராமத்தில் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பிற்காக அக்கிராமத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரே விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டதாக அவ் வானொலி மேலும் தெரிவித்தது.

## வரி விளம்பரம்

### எம் ஜி. ஆர் திருமணசேவை

பொருத்தமான மணமகன் மணமகள் தேடுபவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் வே. புண்ணியமூர்த்தி அனுமதி இலக்கம் 2518 புத்தூர்ச்சந்தி, மீசாலை. (3373)

### தவறிவிட்டது

பனவத்தை வியாபாரி மூலையைச் சேர்ந்த செல்வி சசிகலா சிவபாதசுந்தரம் என்பரது அடையாள அட்டை [597130805 V], வைத்திய சாலை தாதிய மாணவ அட்டை, பணம் சங்கிலி ஒன்றும் கைக்கடிகாரம் என்பவை 25-1-93 அன்று இளாலியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இவற்றை தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். [4161]

### போஷாக்குணவு விநியோகம்

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவர் திரு. ட. பி. இம்மானுவேலின் துரித நடவடிக்கையின் பயனாக மணிப்புரி, நாவலடி, உதயபுரம் மக்களுக்கு அன்டையில் போசாக்கு உணவு விநியோகிக்கப்பட்டது

நல்லூர் பிரதேச சபையினால் இப்போசாக்கு உணவு வழங்கப்பட்டது என நிலையச் செயலாளர் திரு. நா. பதமராசா தெரிவித்துள்ளார். (24)

### செபஸ்தியார் திருநாள்

[வேலணை]

தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் புனித செபஸ்தியார் திருநாள் சென்ற 20ஆம் திகதி புதன்கிழமை மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

திருநாள் கூட்டுத் திருப்பலியை யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அன்றைய தினம் ஆயர் அவர்கள் அறுபத்தி மூன்று மாணவர்களுக்கு உறுதி பூசுதல் திருவருட் சாதனத்தை வழங்கினார். (14)

### இலக்கிய அவை

[குருநகர்]

யாழ் பிரதான வீதி திருமறைக் கலாமன்ற கேட்போர் கூடத்தில் நாளை மறுநாள் [30-1-93] சனி மாலை 5மணிக்கு 'இலக்கிய அவை' 'கலைமுகம்' ஆசிரியர் திரு பி எஸ். அல்பிரட் தலைமையில்கூடும்.

'மல்லிகை' ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா இலக்கியக் கருத்துரை வழங்குவார். (21)

### புதிய வகுப்புகள் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு நாளை வெள்ளிக்கிழமை தமது விஞ்ஞானமாணி தகுதிகாண (G S.Q) வகுப்புக்களை மாலை 3 00 மணிக்கு ஆரம்பித்து வைக்கின்றனர். இவ்வைபவம் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள யாழ்ப்பாணக்கல்லூரி கிளை நிறுவனத்தில் நடைபெறும் துணைவேந்தர் அ. துரைராஜா சம்பிரதாய பூர்வமாக இவ்வகுப்புக்களை ஆரம்பித்து வைப்பார்.

## 300 பேக்கரிகள் அமைக்க ஜனாதிபதி திட்டம்

(கொழும்பு)

பேக்கரிச் சொந்தக்காரர்களின் ஏகபோக உரிமையை ஒழித்துக்கட்டும் பொருட்டு நாடு முழுவதும் 300 புதிய பேக்கரிகளை அமைப்பதற்கு சிறிலங்கா ஜனாதிபதி உத்தேசித்துள்ளதாகத் தெரிகின்றது.

300 புதிய பேக்கரிகளை அமைப்பதன் மூலம் மக்களுக்கு நியாயமான விலையில் பாண் கிடைப்பதுடன் நூற்றுக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும் என்றும் ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


## யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதான விரிவாக்கம்

எமது சங்கத்தினால் நடாத்தப்பட்ட மேற்படி திட்டத்திற்கான நிதி சேகரிக்கும் பரிசுச் சீட்டிழுப்பு 31-01-1993 மாலை 04.00 மணிக்கு எமது கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறும், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலர்,
பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக் கல்லூரி.

[சி 5894]

## 31-ம் நாள் வீர அஞ்சலி



வீரச்சாவு :- 28 - 12 - 1992

**மேஜர் கோபி - [தமிழேந்தி]**
(கதிரவேலுப்பிள்ளை காளியப்பு)
மேற்குக்கொலனி - தம்பலகமம்

**கப்டன் விபுலன் [தோன்றல்]**
வேலாயுதம் பரமேஸ்வரன்
யூனிற் - 02 - கந்தளாய்

**லெப்டினன்ட் மண்டேலா [பொற்கைமாறன்]**
முருகையா முரளி
பன்குளம்.

திருமலையின் எரிமலை - இவன்
தீரமிகு பெருமலை
தலைநகரின் ஒருமலை - இவன்
தலைவனின் வழிமுறை

மாதம் ஒன்றாகி - இவன்
மறைந்து நாளாகினும்
மனதுள் நிறைந்த - இவன்
மறவான் எமைவிட்டு.

திருமலை மாவட்ட
இடம் பெயர்ந்தோர்.
முல்லை மாவட்டம்

[4163]

## தவறிவிட்டது

கடந்த 25-1-93 இரவு 7.00 மணியளவில் கொக்குவில் பொற்பதி வீதிக்கும் திருநெல்வேலி - கொக்குவில் சந்தி வீதிக்கும் இடையில் செல்லையா உருத்திரா ஆகிய எனது பேஸ் தவறிவிட்டது. இதற்குள் சிறு தொகைப் பணமும் 551242501 V இலக்கமுடைய எனது தேசிய அடையாள அட்டையும் திருமதி உருத்திரா விஜயகுமாரி அவர்களது அடையாள அட்டையும் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அட்டையும் உள்ளடங்கும், இதை கண்டெடுத்தவர்கள் வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் இல 71, கே. கே. எஸ். வீதி. கொக்குவில் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

[சி-5891]

பருத்தித்துறை பிரதேச சபை
சனசமூக நிலையங்களின் சமாசம்
26-1-1993-ல் நடாத்திய

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

1 ஆம் பரிசு - 1251   2 ஆம் பரிசு - 14
3 ஆம் பரிசு - 1627

ஆறுதல் பரிசுகள்:
715, 1170, 1857, 555, 418, 2288, 870, 1453, 1619.486

| | | |
|---|---|---|
| க. ஆறுமுகம் | ஆ.நா.சு. திருச்செல்வம் | இ அன்ரனி |
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

[சி-5892]

## நினைவு கூருகின்றோம்...

### 1993-1-28

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - மொறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் வீரச்சாவெய்திய -

★ எஸ். பாலையா [மொறக்கொட்டாஞ்சேனை - மட்டக்களப்பு]

திருக்கோணமலை - மூதூர், சம்பூர் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

சீலன் [கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் - பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர் - திருக்கோணமலை]

திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுக் கடலில் வீசப்பட்ட, மூதூர், கட்டைபறிச்சானைச் சேர்ந்த 4 தமிழர்கள். கும்புறுப்பிட்டிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழ் விவசாயிகள்.

1987 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

துரைசிங்கம் [சா. துரைசிங்கம் - கோயில்போரதீவு - மட்டக்களப்பு]

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கோவில்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ரவி [அழகையா ரவீந்திரன் - புதுக்குடியிருப்பு - மட்டக்களப்பு]

1989 ஆம் ஆண்டு திருக்கோணமலை - மூதூர், கட்டைபறிச்சான் பகுதியல் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

ரட்ணா

யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

லெப், ரட்ணா [இராசநாயகம் இரத்தினகுமார் - 38, இரத்தினகுமார் வீதி, கொழும்புத்துறை - யாழ்ப்பாணம்]

இதே சுற்றிவளைப்பின்போது இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த -

கணேஷ் [ — அன்பழகன் - தேவாலய வீதி, சங்கானை - யாழ்ப்பாணம்]

1992 ஆம் ஆண்டு வவுனியா - தாண்டிக்குளம் சோதனை முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, இதே தினம் மகஸீன் சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த தமிழ்ப் பெண்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/5887)

# அரசு இந்துக்களை ஆதரிப்பது என்பது வெறும் பாசாங்கு

**-ஷண்முகநாதக் குருக்கள்**

(யாழ்ப்பாணம்)

பௌத்த சிங்கள அரசு கொழும்பில் இந்துக் கோவில்களை ஆதரிப்பதாகக் காட்டிக் கொள்வது வெறும் பாசாங்குத்தனமானது என்று மகாராஜ ஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள் தெரிவித்தார்.

அண்மையில் நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் தலைமை வகித்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில்; திட்டமிட்ட அடிப்படையில் இந்துக் கோவில்களும், இந்துக்களும் அழிக்கப்பட்டு வருவதாகவும், பிதிர்க் கடன்களைக் கூட நிறைவேற்ற முடியாத நிலையில் இந்துக்கள் சிரமப்படுவதாகவும் தெரிவித்தார்.

இங்கு கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் உரை நிகழ்த்துகையில்; சோழப் பெருமன்னனின் ஆட்சியில் ஏற்பட்ட கலைப் புத்துணர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு என்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தரங்கில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆத்மஜோதி நா. முத்தையா, கலாநிதி சிற்றம்பலம், திரு. ஆ. மகாலிங்கம் உட்படப் பலர் கலந்து உரையாற்றினர்.

## நிதிப் பற்றாக்குறையால் முற்பணக்கடன் நிறுத்தம்

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் கல்வித் திணைக்கள ஊழியர்களின் நட்டஈடு விண்ணப்பங்களை உடனடியாக தமக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் யாழ். கல்வித் திணைக்களத்தைக் கோரியுள்ளார்.

மேலும் வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நிதிப் பற்றாக்குறை நிலவுவதனால் ஆசிரியர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் இரண்டு வருட சம்பள முற்பணக் கடன் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [17]

## இடம்பெயர்ந்தோருக்கு மாதிரி கிராமம் அமைப்பு

[வடமராட்சி]

வலிகாமம் மேற்கு சுழிபுரம், மாதகல் பகுதிகளில் இருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்தவர்களில் 250 குடும்பங்களுக்கு அம்பன் கடற்கரையோரப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ''மாதிரி கிராமம்'' ஒன்று உருவாக்கப்பட்டுவருகிறது.

முதற்கட்டமாக இப்பகுதியில் 50 குடும்பங்களுக்கு தனித்தனி குடிசைகள் அமைத்து குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. இவர்களது சுயதொழிலான கரைவலைத் தொழில் செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது இவர்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களை புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருகிறது.

இதனையடுத்து இக்குடும்பங்களின் பிள்ளைகளுக்கான கல்வி வசதிகளும் செய்து கொடுக்கப்படும். மேலும் 200 குடும்பங்களை இப்பகுதியில் குடியமர்த்தி தொழில், கல்வி போன்றவற்றையும் செய்து கொடுக்கும் பணிகளில் வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் செயற்பட்டு வருகிறார். (யோ)

## பயறு, கௌபீ பயிரிட ஊக்குவிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் பயறு, கௌபீ பயிர்ச்செய்கைகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை ஊற்று நிறுவனம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. வெண்காயச் செய்கையிலே வெண்காயத்தினுள் ஊடு பயிராக பயறு, கௌபீ என்பனவற்றைப் பயிரிடலாம் என அறிவித்துள்ள ஊற்று நிறுவனம் வெண்காயத்தினுள் ஊடு பயிராக பயறு, கௌபீ என்பனவற்றை பயிரிட விரும்பும் விவசாயிகள் ஊற்றுத் திட்ட அலுவலகத்துடன் (புலோலியிலுள்ள) தொடர்பு கொண்டால் கௌபீ, பயறு போன்றவற்றின் விதைகளையும், இப் பயிர்ச்செய்கைக்கான மண்ணெண்ணெய்யையும், பெற்றுக்கொள்ளலாமெனவும் ஊற்று நிறுவனம் விவசாயிகளுக்கு அறிவித்துள்ளது. (25)

## வேப்பமரத்தில் குடியிருக்கும் ஏழு பாம்புகள்

சங்கானை அராலிவீதி குடியேற்றத் திட்டத்தில் க. தங்கராசா என்பவரது வளவிலுள்ள வேப்பமரத்தில் ஏழு பாம்புகள் குடியிருக்கக் காணப்படுகிறது. இ(ந்)த ஏழு பாம்புகளையும் நூற்றுக்கணக்கான மக்கள் திரள்திரளாக சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

அவ்வளவில் உள்ள குடிசையில் கீரிமலை வசந்தபுரத்திலிருந்து இடம் பெயர்ந்துவந்த க. மாணிக்கம் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

## சின்னக் கருவேலம் விதை பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு

கிளிநொச்சிப் பகுதியில் சின்னக் கருவேலம் விதை பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக விசுவமடு ஊரியான், துணுக்காய், பாண்டியன்குளம் கிளிநொச்சி மேற்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள உற்பத்திக் குழுக்கள் மூலம் விதை விநியோகிக்கப்பட்டது.

கிராமங்களில் ஏற்படும் விறகுத் தேவையை பூர்த்தி செய்வதற்காகவும் மண்ணரிப்பைத் தடுத்தல் உவர் நிலங்களில் நடுவதன் மூலம் உவர்த்தன்மையை நீக்குதல் போன்ற காரணிகள் இப்பயிருக்கு சிறப்பம்சங்களாக காணப்படுவதால் இதனைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

## ஆய்வு அறிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையினரால் இலங்கையின் நன்னீர் உயிரினங்களின் சூழல், வதிவிடம், வாழ்முறை ஆகியவற்றின் ஆய்வு அறிக்கைகள் வெளியிடப்படவுள்ளன.

இது சம்பந்தமான மாநாடு இன்று காலை 9.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக பௌதிக விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

270831591V, எனும் இலக்கமுடைய வெங்கடாசல ஐயர் கிருஷ்ணஐயர் (பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு - 12) என்பவரின் அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

## யாழ்ப்பாணம் திரும்பினர்

[வடமராட்சி]

வடமாகாண பிரதி தபால் மா அதிபர் திரு எஸ். என். சேதுகாவலரும், யாழ் வைத்தியசாலை டாக்டர் ராஜேஸ்வரியும் நேற்று காலை 'குமாரி' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்தனர்.

நேற்று முன்தினம் விமானம் மூலம் வந்த இவர்கள் காங்கேசன் துறையில் இருந்து 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தனர். [யோ]

## விபத்தில் ஒருவர் படுகாயம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி பெரியரசடிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு ஒன்பது மணியளவில் கண்டி வீதி வழியாக வந்த லொறி - துவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கரவண்டியில் வந்த மடத்தடி, சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. எஸ். இராஜதுரை [வயது 43] என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் மின்கம்பத்தில் மோதுண்ட நிலையில் லொறியும் பலத்த சேதமடைந்தது. (மு)

## போட்டி முடிவு வெளியிடப்பட்டது

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறி நாக வரத நாராயணர் தேவஸ்தானம் 1992-ம் ஆண்டில் ஆவணி மகோற்சவத்தை முன்னிட்டு நடத்திய சொற்பொழிவு சமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டுள்ளது. [12]

## இடமாற்றம்

யாழ். மாவட்டத்திற்கான திரிசாரணர் குழுவின் நல்லூரில் இயங்கி வந்த தலைமை அலுவலகம் தற்பொழுது இடமாற்றப்பட்டுள்ளது. சிற்றிசன் கல்வி நிறுவனம் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு என்னும் முகவரியில் தற்காலிகமாக இயங்கும் இவ் அலுவலகம் பிற்பகல் மூன்று மணி முதல் ஆறு மணி வரை செயற்படும் என அறிய வருகின்றது.

## வடமராட்சி கிழக்கிற்கு 33 ஆசிரியர்கள்

ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில் இருந்து பயிற்சியை முடித்து வடமராட்சிக் கல்விக் கோட்டப்பகுதி பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட 87 பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் 33 ஆசிரியர்கள் பின்தங்கிய பிரதேசமான வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கு வடமராட்சி கோட்டப்பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பயிற்சி பெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் 31 பேரும், விஞ்ஞான ஆசிரியர்கள் 26பேரும், கணித ஆசிரியர்கள் 21பேரும், மனைப்பொருளியல் ஆசிரியர்கள் 5 பேரும் றோமன்கத்தோலிக்க ஆசிரியர் 2 பேரும், இந்து சமய ஆசிரியர் ஒருவருமாக வடமராட்சிக்கு அனுப்பிவைக்கப்பட்ட 87 ஆசிரியர்களில் வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்குகணித ஆசிரியர்கள் 9 பேரும், விஞ்ஞான ஆசிரியர்கள் 2பேரும், ஆரம்ப ஆசிரியர்கள் 10பேரும் மனைப்பொருளியல் ஆசிரியர்கள் 3 பேரும், றோமன் கத்தோலிக்க ஆசிரியர்கள் 2 பேரும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர் (25)

## நிர்வாகிகள் தெரிவு

குருநகர் சென்றோக்ஸ் சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக எம். எட்வேட்டும், செயலாளராக வி. எம். ஜெறாட்டும், பொருளாளராக எவ். அருள்நேசனும் தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு மற்றும் உத்தியோகத்தர்களும் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## விசேட கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் விசேட ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்குச் சம்மேளனப் பணிமனையில் சம்மேளனத் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் நடைபெறும். (24)

## அன்பளிப்பு

கைதடியில் இயங்கும் செவிப்புலன் மற்றும் விழிப்புலன் இழந்தோருக்கான நவீல்ட் பாடசாலைக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரமும், உடுபுடைவைகளும், இதர பாடசாலை உபகரணங்களும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள லயன்ஸ் மற்றும் லியோ கழகங்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (மு)

யாழ்ப்பாண மாநகரசபை

**ஆதனவரி அறிவித்தல்**

**1993, முதலாம் காலாண்டு**

ஆதனவரி மீள் விலைமதிப்பு நடவடிக்கைகளால் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஆதனவரி அறிவித்தல் தற்பொழுதுதான் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

1993ஆம் ஆண்டு 1ஆம் கந்தாய வரியை மே மாதம் 31ஆம் திகதி வரை தண்டமேதுமின்றி செலுத்த முடியும் என்பதை அறியத்தருகிறேன்.

1993ஆம் ஆண்டுக்குரிய ஆதனவரியை 31-3-1993க்கு முன் முழுமையாகச் செலுத்துவோர் 10 வீத கழிவுக்கும் 1-ம் காலாண்டுக்குரிய வரியைச் செலுத்துவோர் 5 வீத கழிவுக்கும் உரித்துடையவராவர்.

காசோலையாகச் செலுத்த விரும்புவோர் மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ். மாநகரசபை

1993-1-27
(சி/ 5895)

**கலை வர்த்தகக் கல்லூரி**

**C. C. A.**

வெலிங்டன் சந்திக்கருகாமை
யாழ்ப்பாணம்.

**DAY CLASSES**

துரித மீட்டல் வினாவிடை

**A/L 92**

பரீட்சை முடிவு கிடைத்த பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புக்கள்

**ஆரம்பம்:- 2. 2. 93**

எமது வழமையான ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. உதயன் |
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — திரு. குகன் |
| அளவையியல் | — திரு. சயந்தன் |
| இந்து நாகரிகம் | — திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — திரு. தங்கராசா |
| புவியியல் | — திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | — திரு. பஞ்சாட்சரம் |

குறிப்பு:- ❊ செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு நான்கு நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.

❊ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமையால் முன் கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.

(சி/5880) - நிர்வாகி

# G. A. Q 94 (பேராதனை)

பேராதனை பல்கலைக் கழகத்துக்கான
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

## விரிவுரைகள் 30-1-93 ஆரம்பம் (காலை 9.00 மணி)

★ A/L 92 AUGUST பரீட்சை எடுத்து 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தால் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு:-

ப. அருள் நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-5884)


# 31-வது நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
5-12-1922

ஆண்டவன் அடியில்
29-12-1992

## திரு. முத்தையா ஐயாத்துரை

கலங்கரை விளக்காய் இலங்கி நின்ற தெய்வமே
காலமெல்லாம் எம்மை கலங்கவிட்டு எங்குற்றீர்
-எங்கள்
குலத்திற்கே குலவிளக்காய் திகழ்ந்து வந்த தெய்வமே
-எமது
இல்லத்தில் இல்லையென்ற குறையேயொழிய
உள்ளத்தில் என்றென்றும் உருவாய் உள்ளீர்

பிளாக்றோட் மனைவி, மக்கள், மருமக்கள்,
சங்கானை. (4149) பேரப்பிள்ளைகள்.

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் கல்வி ஆண்டு 1993 ற்கானமுதலாம் தவணை அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என அதன் அதிபர் அறிவித்துள்ளார்.

சகல விரிவுரையாளர்களையும் போதனாசிரியர்களையும் முதலாம் திகதியிலிருந்து சமூகமளிக்குமாறும் மாணவர்களை அடுத்தமாத 8-ம் திகதி முதல் சமூகமளிக்குமாறும் அதிபர் கேட்டுள்ளனர்.

## பௌதிகத்துறை வெற்றிடம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக பௌதிகத்துறையில் உள்ள விரிவுரையாளர் வெற்றிடங்களை உடன் நிரப்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக பௌதிகத் துறையில் நிலவிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் பல பிரச்சினையை யாழ் வளாகம் சந்தித்துள்ளது என்றும் ஆசிரிய விரிவுரையாளர் நிரப்பப்பட்டதும் இப்பிரச்சினைகள் உடன் நீங்கும் எனத் தெரிவித்தார். (05)

## சிறுவர்களுக்கு பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டது

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் அல்லாரை அலகு ஜே. 322 இன் மூலம் அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் 15 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்குப் பூச்சிமருந்து (VERMOX) கொடிகாமம் பிரதேசசபை, பொது சுகாதாரப் பரிசோதகரின் அனுசரணையுடன் வழங்கப்பட்டது.

அதில் 70 பிள்ளைகள் கலந்து கொண்டு பயனடைந்தனர் எனத் தலைவர் தெரிவித்துள்ளார். (24)


# கலைவர்த்தகக் கல்லூரி C.C.A.

வெலிங்டன் சந்திக்சருகாமை
யாழ்ப்பாணம்

## வார இறுதி வகுப்பு

1992 க. பொ. த. உயர்தரப்
பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான
துரித மீட்டல் வினாவிடை வகுப்பு

ஆரம்பம் :
**30-1-93 சனி, பி.ப. 1.00 மணி**

வர்த்தகம் : திரு. இ. இரட்ணம்

குறிப்பு : 1992 நவம்பரில் இருந்து செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வர்த்தகம் பகல்நேர வகுப்பு நடைபெறுவதில்லை. ஆகையால் சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களில் மட்டுமே நடைபெறும்.

நிர்வாகி

(சி-5890)



## சமூகசேவை நிதிக்காக

புனித பத்திரிசியார் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மட இன்ரறக்ட் கழகங்கள் இணைந்து வழங்கும்,

## ★ "இன்னிசை மழை" ★

இடம்:- புனித பத்திரிசியார் கல்லூரி
மண்டபம்


காலம்:- 30-1-93 (சனிக்கிழமை)

நேரம்:- காலை 9 மணி
மாலை 2-30 மணி

நுழைவுச் சீட்டுக்கள் மண்டப வாயிலில்)

(4145)


# 31ஆம் நாள் நினைவுக்கோலம்!







| மேஜர் கோபி | கப்டன் விபுலன் | லெப். மண்டேலா |
|---|---|---|
| (தமிழேந்தி) | (தோன்றல்) | (பொற்கைமாறன்) |
| கதிரவேலுப்பிள்ளை காளியப்பு | வேலாயுதம் பரமேஸ்வரன் | முருகையா முரளி |
| தம்பலகமம் - திருமலை | கந்தளாய் - திருமலை | பன்குளம் - திருமலை |

**வீரச்சாவு: 28. 12. 92**

திருக்கோணமலை மண்ணில் உருவாகினீர்!
திடமான உளத்தோடு சமராடினீர்!
செருக்கோடு தமிழீழம் தலைநிமிரவே!
சிறப்போடு பணியாற்றி எருவாகினீர்!

மாணிக்கம் உதிர்ந்தாலும் மண்மீதிலே!
மங்காது ஒளிவீசும் என் நாளுமே!
காணிக்கை யாய் வீழ்ந்த புலிவீரரே!
காலத்தால் மறவாது (உ)ம் புகழ் வாழுமே!

(சி/5870) **- திருமலை மாவட்ட மக்கள்**




# UNIKCO COMPUTER CENTER

★ **BASIC**
Introduction to Data Processing Programming with File handling graphics and music

★ **dBASE III+**
Commercial and Administration Programming

★ **LOTUS 1-2-3**
Accounting Statistical and graphics

★ **WORD PROCESSING**
wordstar 5·5 word perfect and Tamil word Processing

ஆரம்பம் Week end 30-1-93
Week day 1-2 93

மேலதிக விபரங்களுக்கு :
***No. 37, CLOCK TOWER ROAD,***
JAFFNA
(வெலிங்டன் சந்திக்கு வடக்குப்புறமாக மேல்மாடியில்)
(சி-5886)

## சிந்தனைக்கு

தற்போதைய தலைமுறையினர் வருங்காலத் தலைமுறைக்கு செலுத்த வேண்டிய கடன், கல்வி.
— ஜார்ஜ் பீபாடி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 28-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

# சிறிலங்காவின் கயமைத்தனம்

1991 / 1992 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதியில் அரசாங்கம் கடைப்பிடித்த வெட்டுப் புள்ளி முறைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு, விசாரணை முடிவுற்ற வேளையிலும், தீர்ப்பு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவ்வழக்கின் தீர்ப்பு அரசாங்கத்திற்கு விரோதமானதாக அமையும் என்பதினாலேயே காலதாமதப் படுத்தப்படுவதாக விஷயமறிந்தவர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, இவ்வழக்கைத் தாக்கல் செய்த மாணவருடன் சமரசம் பேசித் தீர்த்துக் கொள்ளும் முயற்சியில் அரசதரப்பு ஈடுபட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

சிங்கள அரசாங்கத்தின் இந் நடவடிக்கையானது கயமைத்தனம் பொருந்தியதாகும். தமிழ் மக்களின் உயர் கல்வியை தட்டமிட்டே அழித்து வரும் சிங்கள அரசாங்கம் நீதி தமிழர் பக்கம் உள்ளது என நீதிமன்றம் கருதும் போது கபடத்தனமாக திரை மறைவுப் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினையை மூடி மறைத்து விடப் பார்க்கின்றது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வழக்காளிக்குச் சாதகமாக முடியுமானால், சிறிலங்கா அரசாங்கம் இதனால் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிவரும். இதன் பிரகாரம் இதனால் இன்னும் பல தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட வேண்டிவரும். ஆனால், அரசாங்கமோ, தமிழ் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய இடங்களை சிங்கள மாணவர்கள் மூலம் நிரப்பியுள்ளது. இந் நிலையில் உயர் நீதிமன்றம் அரசிற்கெதிராக தீர்ப்பு வழங்கினால், அதன் மூலம் அனுமதி பெறும் மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்தில் இட ஒதுக்கீடு செய்யமுடியாத நிலை ஏற்படும். இதற்காக பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள சிங்கள மாணவர்களை இடை நிறுத்த முடியாது. இவ்வாறு செய்யின் அது பெரும் அரசியல் பூகம்பத்தையே தெற்கில் உருவாக்கிவிடும். இவ்வாறாக இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை அரசிற்கு ஏற்பட்டுள்ளது. இவை யாவற்றிற்கும் மேலாக இவ்வழக்கின் தீர்ப்பு வழக்காளிக்குச் சாதகமாகும் பட்சத்தில், எதிர்காலத்திலும், இதுபோன்ற நெருக்கடிகள் பலவற்றை அரசாங்கம் சந்திக்கவேண்டி ஏற்படலாம் எனவும் அரசு அஞ்சுகிறது.

இந் நிலையில் வழக்குத்தாக்கல் செய்த மாணவனையும் அவர் பெற்றோரையும், சமரசம் செய்வதன் மூலம் வழக்கை சமரசமாக முடித்துக் கொள்ளவும், அதன்மூலம் ஏற்படப் போகும் நெருக்கடியைத் தீர்க்கவும் அரசாங்கம் முற்படுகின்றது. அதாவது ஓர் இனத்திற்குச் செய்த துரோகத்தை ஒருவரைத் திருப்திப்படுத்துவதன் மூலம் தீர்த்துக் கொள்ள பேரினவாதம் விரும்புகின்றது.

ஆனால், இது தனித்துவமாக ஒரு தமிழ் மாணவனுடைய பிரச்சினையல்ல. ஒரு இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிரான பிரச்சினை. அம்மாணவன் அரசிற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய முன்வந்தமை பாராட்டுதற்குரியதொன்றே. ஆனால், அவ்வழக்கின் முடிவு தனியாக அந்த மாணவனை மட்டும் பாதிக்கப் போவதில்லை. தமிழ் மாணவர்கள் அநேகரைப் பாதிக்கும் முடிவாகும்.

இந் நிலையில், இவ்வழக்கில் இம் மாணவரோ, அவரது பெற்றோரோ தன்னிச்சையான முடிவு என்பதை விடுத்து தமது இனத்தின் நலன் என்ற அடிப்படையிலேயே முடிவுகளை மேற்கொள்ளுதல் விரும்பத்தக்கது. இது அம்மாணவனுக்கும் நன்மை பயக்கக் கூடியது. தமிழ் தேசியஇனத்திற்கும் நன்மை பயக்கக்கூடியது. சிறிலங்கா அரசாங்கத்தின் துரோகத்தனத்தையும் வெளிக்காட்டக்கூடியது.

# இந்திய அரசாங்கத்தின்

ளுக்கும் காரணகர்த்தாவாக இந்திய அரசு விளங்குகிறது. இது பற்றி ஒரு சில கருத்துக்களை நான் இங்கு எடுத்து முன்வைக்க விரும்புகிறேன்.

### இந்தியாவின் 10 வருடத் தலையீடு

இந்திய தலையீடு கடந்த பத்து வருடமாக இருந்து வருகிறது. 1983 ஜூலை மாதக்கலவரத்தை தொடர்ந்து தொடங்கிய இந்தத் தலையீடு பல்வேறு நிலைகளில், பல்வேறு பரிமாணங்களில்தொடர்ந்தும் இன்றும் இருந்து வருகின்றது. ஏதோ இந்தியா எமது பிரச்சினையிலிருந்து விட்டு விலகி ஒதுங்கி நிற்பதாக எண்ணுவது தவறு. வித்தியாசமான முறையில் இந்த தலையீடு இருக்கிறது கிட்டுவிற்கு ஏற்பட்ட இந்தச் சம்பவம் - கிட்டுவின் வீரமரணம்- இந்தியாவின் தொடர்ச்சியான தலையீட்டின் இறுதியான ஓர் உச்சகட்டம் ஆகும். இது மட்டும்மல்ல ஓர் ஆங்கில தத்துவ ஞானி சொல்லுவார், அரசுகளைப் பொறுத்தவரையில் அரசுகளுக்கு நட்பு என்பதும் இல்லை, நண்பர்கள் என்பதும் இல்லை, தார்மீகம் என்பதும் இல்லை, மனிதாபிமானம் என்பதும் இல்லை. அந்த அரசைப் பொறுத்தமட்டில் தனது தேசிய நலன்தான் முக்கியம். அந்தத் தேசியநலனின் அடிப்படையில் தான். எல்லா அரசுகளும் இயங்குகின்றன

நாங்கள் இராஜதந்திரம் என்பதும், சர்வதேச உறவுகள் என்று கூறுவதும், நல்லெண்ணம் என்று சொல்வதும், இப்படியாக பல்வேறு அர்த்த பரிணாமங்களில் நாங்கள் உபயோகிக்கும் சொற்பிரயோகங்களில் எவ்வித அர்த்தமும் இல்லை. உண்மையான அர்த்தம் அந்தந்த நாடுகளின் உள்ளீடான நலன்களில் தான் பொதிந்து போய் கிடக்கின்றது இது தான் உண்மை. இந்தியாவும் தனது தேசிய பூகோள நலனைக் கருத்தில் கொண்டுதான் இப் பிரச்சினையை அணுகியது. தமிழீழ மக்களின் பாதுகாவலன் தமிழீழ மக்களின் இரட்சகன், தமிழர்களுக்கு விடிவு தேடிக் கொடுக்க வந்தவன் இப்படியெல்லாம் பாசாங்கு காட்டி நடித்து இராஜதந்திர காய்களை நகர்த்தி எத்தனையோ வகையில் தனது தலையீட்டிற்கு வியாக்கியானம் அளிக்க முற்பட்டாலும், அடிப்படையில் இந்தியா தனது நலனை முன்வைத்து தான் செயற்படுகிறது. இது தான் உண்மைஅப்படியானால் இந்தியாவின் நலன் என்ன?

### இந்தியாவின் நலன் என்ன?

கெடுபிடி யுத்தத்தினால் சர்வதேச உலகம் இரண்டு பெரும் அணிகளாகப் பிளவுபட்டு நிற்கின்றது. சர்வதேச ரீதியான ஆதிக்கத்தை இரு பெரும் வல்லரசுகள் செலுத்தி வரும் நிலையில் இந்தியா தனது இடத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவே அணிசேரா அமைப்பை உருவாக்கிஅதற்கு தலைமை தாங்க முற்பட்டது.

மேலும் அந்தக் காலத்தில் ஜெயவர்த்தனா அரசு அமெரிக்க - மேற்குலக சார்பாக மேற்குலகை நாடிநின்றது. இங்கு கிளர்ந்துள்ள தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க மேற்குலகின் உதவியை நாடியது. இந்திய வல்லாதிக்கத்தை அசட்டை செய்து-இந்தியவின் உதவியை நாடாமல்-மேற்குலக நாடுகளின் உதவியை நாடியது இது இந்திரா காந்தி அம்மையாருக்கு ஆத்திரத்தை ஊட்டியது. இந்த சிங்களக் கிழட்டு நரிக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்- எப்படி படிப்பிப்பது?- தமிழீழ விடுதலைப் போராளிகள் அமைப்புக்களைக் கொண்டு இந்தப் பாடத்தை படிப்பிக்க இந்தியா முற்பட்டது. சிங்கள அரசை ஆட்டம்காணச்செய்ய வேண்டும். சிங்கள அரசு மீண்டும் தனது காலடியில் வந்து விழ வேண்டும். இதற்காக ஒரு இடைக்கால உத்தியாக - தந்திரோபாயமாக- விடுதலை அமைப்புகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டது. ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதாவது இலங்கையை தனது ஆதிக்க வியூகத்திற்கு உள்ளே கொண்டுவருவதற்கு இந்தியா முயன்றது. இதற்காக தமிழீழ விடுதலைப் போராளிகளை பகடைக் காய்களாக இந்தியா பயன்படுத்தியது. இதுதான் உண்மை.

### இராஜதந்திர பயங்கரவாதம்

பல வருடங்களைத் தலைவர் பிரபாகரனோடு நான் இந்தியாவில் கழித்திருக்கின்றேன். தலைவர் பிரபாகரன் இந்தியாவின் அழுத்தம் மற்றும் நெருக்குதல்களுக்கிடையில், பயமுறுத்தல்களுக்கிடையில் எவ்வாறு சிக்கித் திணறினார் என்பதை நான் அறிவேன். நான் அவருடன் அருகில் இருந்திருக்கிறேன். டில்லியில் என்ன? பெங்களூரில் என்ன? சென்னையில் என்ன? எங்கெங்கு பல கூட்டங்கள் - இரகசிய மாநாடுகள் எத்தனையோ நடந்தன. நாங்கள் இந்தியாவில் சும்மாஒருவீட்டுக்குள் இருந்து தூங்கிக்கொண்டு இருக்கவில்லை. எங்கள்மீது போடப்பட்ட அழுத்தங்கள் பற்றி எமது மக்களுக்குத்தெரியாது. இனிமேல்தான் எடுத்துக்கூற வேண்டும். கொஞ்சங்கொஞ்சமாகத்தான் சொல்ல வேண்டும். அந்த நாட்களில் வாய் திறக்கமுடியாது. அப்படிச் சொல்லியிருந்தால் இந்தியாவின் விரோதிகள் எனப் பட்டம் சூட்டியிருப்பார்கள். தலைவர் பிரபாகரன் பலதடவைகள் சிறைபிடிக்கப்பட்டார். சிறையில் இருந்தார். பல தடவைகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். நான் நாடுகடத்தப்பட்டேன். எனதுவீட்டிற்கு குண்டு வைத்துத் தகர்த்தார்கள். எங்களைச் சும்மாவா விட்டார்கள்?

இந்திய இராஜதந்திரம் மென்முறையானது அல்ல. வன்முறையானது. வக்கிரமானது. அது ஓர் இராஜதந்திரப் பயங்கரவாதம். உங்களுக்கு டிக்சிற் பற்றித் தெரிந்திருக்காது. நாங்கள் பல வருடங்கள் அவருடன் இழுபட்டிருக்கின்றோம். விவாதித்தோம் - சண்டைகள் பிடித்தோம் - அவர் பயமுறுத்தினார். உதாரணத்துக்கு ஒரு சில விடயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பெங்களூரில் ஒரு பேச்சுவார்த்தை. அப்போது நானும் தலைவர் பிரபாகரனோடு போயிருந்தேன். அப்போது டிக்சிட் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார். என்ன திட்டம்? கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரிப்பது. அம்பாறையை முஸ்லிம்களுக்கும், மட்டக்களப்பைத் தமிழருக்கும், திருக்கோணமலையைச் சிங்களவருக்கும் கொடுக்கும் திட்டம் அது. இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து தலைவர் பிரபாவை ஏற்கும்படி கேட்டார். இதை எப்படி ஏற்பது? தலைவர் பிரபாகரன் அதனை நிராகரித்தார். இது தமிழர் தாயகத்தைப் பல கூறுகளாகப் பிளவுபடுத்தும் திட்டம். இதை எப்படி நாம் ஏற்பது? அப்போது டிக்சிட் தலைவரையும், என்னையும் ஓரிடத்திற்குக் கூட்டிச் சென்று நீங்கள் இதை ஏற்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் சிங்கள இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிய படையெடுப்பைச் செய்யப்போகிறது. பத்தாயிரம் தமிழர் வரை கொன்று குவிக்கும் திட்டம் இவர்களுக்கு உள்ளது. மக்கள் அநியாயமாக உயிரிழக்கப் போகிறார்கள். நீங்கள் உங்களது வரட்டுச்சித்தாந்தம், வரட்டுக்கொள்கைகளைப் பிடித்துக்கொண்டிருந்தால் மக்கள் அநியாயமாகச் சாக நேரிடும். எனவே நீங்கள் கொள்கையைக் கைவிடுங்கள். இதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றும் அவர் வலியுறுத்தினார். அப்போது பிரபாகரன் மிக நிதானமாகச்சொன்னார். சிங்கள இராணுவம் அப்படி ஒரு பெரிய படையெடுப்பை நடத்துவதாக இருந்தால்- எமது மக்களில் பதினாயிரம் பேர் இறக்கப்போவதாக இருந்தால் - இந்தியா என்ன செய்யும்? இதைத் தடுத்து நிறுத்த நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? நீங்கள் தலையிட வேண்டாம். எங்களுக்கு உதவி செய்யுங்கள். நாங்கள் கேட்கும் ஆயுதங்களைத் தாருங்கள். நாங்கள் இந்த அழிவைத் தடுத்து நிறுத்துவோம் என்று தலைவர் பிரபாகரன் தெளிவாகச் சொன்னார். அது டிக்சிட்டிற்கு பிடிக்கவில்லை, அதனால் அவர் பிரபாகரனுக்கு தமிழ் மக்களில் அக்கறையில்லை என்றும், இவர் சுயநலவாதி என்றும், இவர் மிகவும் ஆபத்தானவர், இவர் தனது சுயநலத்திற்காக ஓர் இனப்படுகொலைக்கு இடமளிக்கிறார் என்று பகிரங்கமாகத் தெரிவித்தார். இப்படியாக எங்களுக்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் என்ன மாதிரி ராஜதந்திரம்? நடுநிசி நேரத்தில் வீடுகளில் வந்து தட்டுவார்கள். ஆர் வந்துதட்டுவது. பொலிஸ்-இரகசியப் பொலிஸ்-புலனாய்வுத்துறை அதிகாரிகள் வந்து தட்டி உடனடியாக டில்லிக்கு வரட்டாம். அவசரம். அப்படியே வாகனங்களில் இழுத்துச் செல்வார்கள். பாதுகாப்புமில்லை. ஆயுதங்களும் கொண்டு போகக் கூடாது, அவர்களை நம்பி ஏறவேண்டும். ஏறினால் இரவிரவாய்க்கொண்டு போய்ஒரு விமானப்படை விமானத்தில் ஏற்றி டில்லிக்கு கொண்டு போவார்கள். அல்லது பம்பாய்க்கு கொண்டு செல்வார்கள். அங்கே கொண்டு போய் ஒரு ஹோட்டலில் அல்லது வீட்டில் அடைத்து வைத்துப் பேச்சு வார்த்தை - இரகசியப் பேச்சுவார்த்தை-இதுதானா? இராஜதந்திரம். எத்தனை பயமுறுத்தல். இதற்கெல்லாம் ஈடுகொடுத்து தலைநிமிர்ந்து நின்று, எமது கொள்கையில் உறுதியாக நின்றிருக்கிறார் தலைவர் பிரபாகரன். இந்திய அரசுக்கு தனது நலன்தான் முக்கியம் என்று சொன்னால்- எங்களுக்கு விடுதலை புலிகளுக்கு - எமது மக்களின் நலந்தான் முக்கியம்.

இடைக்கால அரசு தரப்படப் போகிறது. உங்களது முழு ஆட்சி நடைபெறப் போகிறது. வடக்கு - கிழக்கு முழுக்க நிர்வாக அரசு என்றார். பேசிக்கொண்டுபோகும் போது நிர்வாக சபையாக அது மாறியது. கடைசியாக டிக்சிற் சொன்னார் இடைக்கால ஆலோசனை சபையாக அது இருக்கும் என்று. அப்பொழுது அரசு, நிர்வாக சபையாக மாறி பின்னர் ஆலோசனை சபை என்றாகியது. அப்படி மிகச் சூட்சகமாக வார்த்தைகளைப் போடக்கூடியவர் அவர். அப்பொழுது நான் ஒரு கட்டத்தில் கேட்டேன். நிர்வாகசபைஎன்று சொல்லுகிறீர்களே இதனுடைய அமைப்பு என்ன? அதிகார வரம்புகள் என்ன? கடமைகள் என்ன? செயற்பாடுகள் என்ன? என்று. அது டிக்சிற்கு கோபத்தை கிளறிவிட்டுவிட்டது. அதை நீர் போய் ஜெயவர்த்தனாவிடம் கேளும் என்று அவர் சொன்னார். இதுதானாஇராஜதந்திரம்? நாம் எவ்வளவு பணிவாக பண்பாக - அமைதியாக இருந்து கதைக்கிறோம். எங்களுக்கும் இவர்களது நடத்தைகள் சினத்தை மூட்டும். அப்போது நான் சிலதடவை வாதாட்டத்தில் இறங்குவேன் அருகிலிருக்கும் தலைவர் பிரபாகரன் அண்ணை

(6-ம் பக்கம் பார்க்க)

# நியமனக் கடிதம் வராமையால் மாற்றலான ஆசிரியர் அவதி

[யாழ்ப்பாணம்]

மத்திய மாகாணத்தில் கடமையாற்றிய இருபத்தியாறு ஆசிரியர்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். 1993 ஜனவரி முதலாம் திகதி முதல் இவர்களது இடமாற்றம் அமுல் செய்யப்படுவதாக கல்வி அமைச்சு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளது.

ஆனால் இவர்களின் நியமனக் கடிதங்கள் எதுவும் இதுவரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை எனத் தெரியவருகிறது.

இவ்வாறு இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர் விபரம் வருமாறு;

எஸ் இந்திராணி, வதனி சண்முகம், ஜீ. எச் பெற்றிக், எச். ஆர். துரைராசா, சர்வானந்த ரவீந்திரன், எம். நிர்மலாராணி, டி. நவராஜா, சங்கரப்பிள்ளை சிவலிங்கம், எல். சுபத்திராதேவி சசதா சிவலிங்கம், வை விஜயரத்தினம், எச். பி. இந்திரா, எம். ராஜலட்சுமி, பி ம. சாந்தன், கே. தவசீலன், எச். ராஜசாய், சு. சின்னத்தம்பி, வி. தெய்வநாயகி, எம். தம்பிராஜா, டி. செல்வத்துரை, ஆர். சரோஜினிதேவி, எச். கிருபானந்தன், எச். சுப்பிரமணியம் ஆகியோர் வடகிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

## தீவக மாணவருக்கு புத்தகம் கிடைக்கவில்லை

இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ள தீவகப் பாடசாலைகளுக்கு இன்னமும் இவ்வருடத்துக்குரிய இலவசப் பாடநூல்கள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இப் பாடநூல்கள் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டு 35 சாக்குகளில் தீவகத்துக்கு அனுப்புவதற்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் பலாலியில் உள்ள இராணுவ உயரதிகாரியின் அனுமதியைப் பெறுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தொடர்பு கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வேலணைக் கோட்டத்தின் கீழ் உள்ள 65 பாடசாலைகளில் சுமார் 21 பாடசாலைகள் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ளதும் இவைகளில் சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி பயிலுவதும் குறிப்பிடத்தக்கது. (17)

## சுப்பசொனிக் அதிர்ச்சி; சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணிப் பகுதியில் கடந்த 6-ம் திகதி சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலினால் அதிர்ச்சியடைந்திருந்த ஒரு சிறுமி நேற்று முன்தினம் மரணமாகியதாகத் தெரியவருகின்றது.

அராலி கிழக்கு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சி. நல்லதம்பி என்பவரின் மகள் அமுதா (8 வயது) என்கின்ற சிறுமியே மரணமானவரென தெரிய வருகின்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. மேற்படி சம்பவம் நிகழ்ந்து சில நாட்களாக அதிர்ச்சிக்குள்ளான இச்சிறுமி காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தாரெனவும் காய்ச்சல் தணிந்து பின்னர் நேற்று முன்தினம் மரணமானதாகவும் தெரியவருகின்றது. (பா)

## முகாமைத்துவப் பயிற்சிக்கு பதிவுசெய்துகொள்ளவும்

இதுவரையும் யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற பயிற்சிநெறியில் கலந்துகொள்ளாத தரம் ஒன்று அதிபர்கள், தரம் இரண்டு அதிபர்கள், தரம் மூன்று அதிபர்கள், உப அதிபர்கள், பிரதி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் ஆகியோர் மேற்படி பயிற்சிநெறியினை மேற்கொள்வதற்குத் தமது பெயர்களை எதிர்வரும் மூன்றாம் திகதிக்கு முன்னதாக முகாமைத்துவ நிலையத்தில் வந்து பதிவு செய்துகொள்ளுமாறு பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் கேட்டுக்கொள்கின்றார்.

## மாணவர்களை சேர்த்தல் 31-ந் திகதியுடன்முடிவுறும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கு முதலாம், ஆறாம் ஆண்டுகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் இம்மாதம் 31 ஆம் திகதியுடன் முற்றுப் பெறுவதாக யாழ் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் க. பொ. த. (உ/த) மாணவர்களே இனி பாடசாலைகளுக்கு புதிதாக அனுமதிக்கப்படுவார்களெனவும் அவர் தெரிவித்துள்ளார். (பா)

## கௌரவிப்பு

(வடமராட்சி)

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 4ஏ அதிவிசேடசித்தி பெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் நடராசா கணநாதன், தனபாலசிங்கம் தயாபரன் ஆகிய இரண்டு மாணவர்கள் அதிபர் ஆசிரியர்களால் கௌரவிக்கப்பட்டனர். அதிபர் திரு பொ. பாலசிங்கம் தலைமையில் இக்கௌரவிப்பு வைபவம் நடைபெற்றது. (யோ)

## யாழ்

கில் இருந்து ரூபா 3000 மட்டுமே வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருகின்றது.

இலங்கை வங்கியில் பணம் இல்லாத காரணத்தால் நேற்றைய தினம் ஆசிரியர்கள் தமது சம்பளக் காசோலையைக்கூட மாற்றிப்பெற முடியாமல் திரும்பியதையும் காண முடிந்தது. வருகிறமாதம் 5-ம் திகதிவரை இந்நிலை இருக்கும் எனவும் கப்பலில் பணம் வந்தபின்னரே இந்நிலை நீங்கும் எனவும் யாழ் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [17]

## இந்திய

என்ற கோசத்தை சித்திரிக்கும் கருத்துப்படம் தாங்கிச் செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து கண்டனப் பேரணி யாழ். பல்கலைக் கழகத்தை நோக்கி நகர்ந்தது.

இக் கண்டனப் பேரணி யாழ். பல்கலைக்கழகத்தை வந்தடைந்ததும் கண்டனக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கைலாசபதி கலையரங்கு நிரம்பி வழியுமளவுக்கு மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

இக் கண்டனக் கூட்டத்தில் யாழ். பல்கலைக் கழக தமிழ் மன்றம், நாடக அரங்கக் கல்லூரி, அகில இலங்கைக் கம்பன் கழகம், தேசிய கலை இலக்கியப் பேரவை, இளங்கலைஞர் மன்றம், இசைவேளாளர் சங்கம், கலை இலக்கியக்களம், சன்மார்க்க சபை, இலக்கிய வட்டம், மற்றும் ஈழநாதம், உதயன், ஈழநாடு பத்திரிகைகள் ஆகியவற்றின் சார்பில் பேச்சாளர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினர். [க]

## படகோட்டி விசாரணையில்

திருக்கோணமலை மூதூர் பாதையில் இடம் பெற்ற படகு விபத்துப் பற்றி விசாரணை செய்யும் பொலிசார் இப்படகிலிருந்து தப்பிக் கரை சேர்ந்த படகின் மெக்கானிக் ஒருவரையும், படகோட்டி ஒருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## இந்திய அரசாங்க

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுமையாக நிதானமாகப் போங்கள் என்று கூறுவார்.

இந்திய அரசின் பல அலகுகள், பல அமைப்புக்கள் பல்வேறு முரண்பட்ட நிலைகளில் இருந்து தான் எமது பிரச்சினையை அணுகுவது. அன்று முதல் இன்று வரை இந்தப் பிரச்சினை நீடிக்கிறது. பிரதமரின் அலுவலகம் மூன்று பிரிவான புலனாய்வு அமைப்புக்கள் அதைவிட பாதுகாப்பு அமைச்சு - வெளிவிவகார அமைச்சு- இந்தியஇராணுவம்- டிக்சிட் கொழும்பில்............

## இந்தியா ஒரு ஜனநாயக நாடல்ல

இந்தியா ஒரு ஜனநாயக நாடல்ல. இந்திய ஒரு சர்வாதிகார அரசு! ஜனநாயகம் என்னும் போர்வையில் சர்வாதிகார ஆட்சிதான் அங்கு நடைபெறுகிறது அங்கு தேசிய இனங்களின் சுதந்திர போராட்டங்கள் நசுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலங்களிலும் ஒவ்வொரு பொலிஸ் இராச்சியம இருந்து, பெரிய அடக்குமுறை தாண்டவம் ஆடிவருகின்றது.

## வடபகுதி

பொலிசார் மேலும் கூறியுள்ளனர். எனினும் இவர் எங்கு வைத்துகைதுசெய்யப்பட்டார் என்பது பற்றிய விபரம்எதுவும் தெரியவரவில்லை.

மேலும் இவரிடமிருந்து வீடியோபட நாடா கைப்பற்றப்பட்டதாகவும், இவர்வெளி நாடுகளில் இலங்கை தமிழர் பற்றிய கண்காட்சிகளை நடாத்தி பணம் திரட்டி விடுதலைப்புலிகளுக்கு உதவினார் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## விடைத்தாள்

வித் திணைக்களத்தில் சமர்ப்பிக்கும்படியும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளை பரீட்சை ஆணையாளர், மதிப்பீட்டுக் கிளை, கொழும்பு - 2 என்கின்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பும்படியும் யாழ். கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். [பா]

## தமிழகக் கரையில் மிதந்த எரிபொருள் கலன்கள்

[சென்னை]

மண்டபத்திற்கு அருகே கடலில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களுடன் மிதந்து வந்த முப்பத்தைந்து பிளாஸ்டிக் கலன்களை மத்திய ரிசேவ் படையினர் கண்டெடுத்துள்ளனர். இக்கப்பிளாஸ்டிக் கலன்களை ஏற்றிச்சென்ற படகு கடலில் மூழ்கியிருக்கலாம் எனவும் அவர்கள்மேலும் கூறியுள்ளனர்.

இதேவேளை தரங்கம் பாடிக்கு அருகே கடலில் இருந்து றப்பரால் ஆன தொலைத் தொடர்பு சாதனங்கள் சில மீனவர்களால் கண்டெடுக்கப் பட்டதாகவும், இது பற்றி காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## மண்ணெய் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட மக்களிற்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ரூபா 15 படி விநியோகிக்க யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி மக்களிற்கு நீர்வேலி, அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது. இவர்கள் தங்களுக்கான குடும்ப அட்டையைச் சமர்ப்பித்து இதனைப் பெற்றுக்கொள்ளலாம் என தெரியவருகிறது.

## இந்தியாவில்

அதனையடுத்து இந்நகரில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும்புதுடில்லியில் நேற்று முன்தினம் இந்திய குடியரசு தினத்தை கறுப்பு தினமாக முஸ்லிம்கள் பிரகடனம் செய்ததையடுத்து அப்பகுதியில் இந்து - முஸ்லிம் கலவரம் வெடித்தது. இரு பகுதியினரும் அப்பகுதியில் பலத்த சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர். அப்பகுதியில் இந்துக்களால் பள்ளி ஒன்றும் சேதமாக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது இதனையடுத்து இப்பகுதியிலும் ஊரடங்குச்சட்டம் பிறபிக்கப்பட்டுள்ளது.

## தலைவர்

தொண்டமானின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேலும சில தகவல்களையும் அவர் நேற்று வெளியிட்டார்.

இக்கடிதத்தில் தொண்டமான்;

''பாராளுமன்றத் தெரிவுக் குழு தோல்வியில் முடிவடைந்து விட்டது. பாராளுமன்ற தெரிவுக் குழு கொண்டுவரப் போகின்ற திட்டம் ஏற்றுக் கொள்ளமுடியாதது. தமிழர்களினுடைய அடிப்படை அபிலாசைகள் எதையும் அது பூர்த்தி செய்யவில்லை அதனால் நான் அந்த பாராளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து விலகிக் கொண்டேன் எனது கட்சி-இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விலகிவிட்டது. இதை உங்களுக்கு அறியத் தருகிறேன்.''

''தெரிவுக்குழு தோல்வியில் முடிந்தாலும் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடியப் போவதில்லை உலகம் வியக்கும் சாதனையை தமிழீழ மக்கள்படைத்துத்தான் ஆவர்கள்'' என குறிப்பிட்டுள்ளார்.


ஈழநாதம்

3ஆம் ஆண்டு

நிறைவுப் போட்டி

சிறுகதை, கவிதை, கருத்துப்படம்

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்

மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

முடிவு திகதி: 05/02/1993


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

27- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8168

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

41-9579, 26-2786, 28-1414, 42-3615, 27-9033, 40-9085, 27-2143, 26-495, 26-3473, 26-1949, 26-9719, 24-5461, 27-5217, 42 2364, 22 9005, 24-6439, 41-8068, 27-5187.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

27-5535, 24-8429, 26-0536, 27-9404, 24-5137, 24-5119, 27 9805, 24-9830, 42-1059, 26-2654, 41-8096, 28-8054, 28-1862, 27-7711, 42-3267, 24-8391, 24-3594, 28-9633, 26-6983, 22-8835, 27-5197.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.